பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 08 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பருவநிலை மாற்றங்களைத் தாங்கி அதிக விளைச்சல் தரக்கூடிய 109 புதிய பயிர் ரகங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் இன்று வெளியிட்டார்.

2. மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டங்களை மாநிலங்கள் முழு அளவில் செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழகத்தின் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் புற்றுநோய் பரிசோதனை மையங்கள் அமைக்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

4. மாநிலத்தில் ஆளும் திமுக அரசு மக்கள் வரிப் பணத்தை வீணடிப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

பருவநிலை மாற்றங்களைத் தாங்கி அதிக விளைச்சல் தரக்கூடிய 109 புதிய பயிர் ரகங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வெளியிட்டார்.

புதுதில்லியில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில் இந்தப் பயிர் ரகங்களை அவர் வெளியிட்டார்.

34 வயல் சாகுபடி பயிர்களும், 27 தோட்டக்கலை பயிர்களும் உள்ளிட்ட 61 பயிர் வகைகள் இதில் அடங்கும்.

சிறுதானியங்கள், எண்ணெய்வித்துக்கள், பருப்பு வகைகள், கரும்பு, பருத்தி உள்ளிட்ட பல்வேறு வகையான புதிய பயிர் ரகங்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

பழங்கள், காய்கறிகள், நறுமணப் பயிர்கள், பூக்கள் மற்றும் மருத்துவ தாவரங்கள் தோட்டக்கலைப்பயிர் ரகங்களில் இடம்பெற்றுள்ளன.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் விவசாயிகள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகளிடையே கலந்துரையாடினார்.

புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள பயிர் ரகங்களின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்த பிரதமர், வேளாண் பொருட்களுக்கு மதிப்பு கூட்டுவதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெற்று வருமானத்தைப் பெருக்கலாம் என்று கூறினார்.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும், பொருளாதரத்தையும் உயர்த்த வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை வரவேற்பதாக இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.

ஒவ்வொரு மாதமும் புதிய பயிர் ரகங்கள் கொண்டுவரப்படும் முயற்சி தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும் விவசாயிகள் கூறினர்.

நூற்றுக்கும் மேற்பட்ட தரமான பயிர் ரகங்களை உருவாக்கி தந்துள்ள வேளாண் விஞ்ஞானிகளுக்கு பாராட்டு தெரிவிப்பதாக கலந்துரையாடலின்போது பிரதமர் தெரிவித்தார்.

<<<<>>>>

மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக மேற்கொண்டுள்ள திட்டங்களை மாநிலங்கள் திறம்பட செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி வலியுறுத்தியுள்ளார்.

மாநில சமூக பாதுகாப்புத்துறை அமைச்சர்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களின் ஆளுநர்களிடையே காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர், குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கென மத்திய அரசு கொண்டு வந்துள்ள ஒருங்கிணைந்த முன்னோடித் திட்டங்களை மாநிலங்கள் முழு அளவில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

<<<<>>>>

முதுநிலை மருத்துவ பட்டப் படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு இன்று நாடு முழுவதும் நடைபெற்றது.

தேசிய தேர்வு முகமை நடத்திய இந்தத் தேர்வில் 2 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

கடந்த ஜூன் மாதம் நடைபெறுவதாக இருந்த இந்தத் தேர்வு குறிப்பிட்ட சில காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டத்தில் 44 இடங்களில் 112 கோடி ரூபாய் மதிப்பில் மருத்துவத்துறை சார்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

வேலம்பாளையத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவமனையில் உயர்தர சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாகவும், விரைவில் இது பயன்பாட்டுக்கு வரும் என்றும் தெரிவித்தார்.

முன்னதாக ஈரோடு அரசு பல்நோக்கு மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டணப் படுக்கை அறைகளை அவர் திறந்து வைத்தார்.

அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை கடந்த 3 ஆண்டுகளில் 2 மடங்கு உயர்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஈரோடு, கன்னியாகுமரி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர் ஆகிய மாவட்டங்களில் சாயப்பட்டறைகள், தோல்பதனிடும் தொழிற்சாலைகள் போன்றவற்றால் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன்,

இதனைத் தடுக்கும் நோக்கில் அனைத்து மாவட்டங்களிலும் புற்றுநோய் பரிசோதனை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

<<<<>>>>

'அன்னையின் பெயரில் மரம் நடுவோம்' என்ற பிரதமரின் அழைப்பை ஏற்று அனைவரும் இந்த இயக்கத்தில் பங்கு பெற்று வலுப்பெற செய்ய வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் தாமரைக்குளத்தில் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து மரம் நடும் இயக்கத்தில் அவர் கலந்துகொண்டார்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்திலும் மக்கள் பங்குபெற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

**Har Ghar Tiranga** இணையதளத்தில் தேசியக்கொடியுடன் செல்ஃபி எடுத்து மக்கள் பதிவிட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் திமுக அரசு மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றாமல் வரிப்பணத்தை வீணடித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஆலச்சம்பாளையத்தில் சட்டப்பேரவைத் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ், நகராட்சிப் பள்ளியில் சுமார் 73 லட்சம் ரூபாய் மதிப்பிலான கூடுதல் வகுப்பறைகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை தொடங்கி வைத்துப் பேசிய அவர், மாநில அரசு கார் பந்தயத்திற்காக 42 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதாக கூறினார்.

கார் பந்தயம் நடத்துவதற்கென இருங்காட்டுக்கோட்டையில் இடம் இருக்கும்போது அதைவிடுத்து மக்கள் அதிகம் பயன்படுத்தும் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த சாலைகளில் கார் பந்தயம் நடத்துவதைக் கண்டிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

மாநிலத்தில் போதைப்பொருள் விற்பனை அதிகரித்துள்ளது என்றும், சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படவில்லை என்றும், நெசவாளர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறை கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட 565 கோடி ரூபாய் மதிப்பிலான ஏரிகள் திட்டத்தையும், அவினாசி-அத்திக்கடவு திட்டத்தையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று கூறினார்.

மின்கட்டணம், வீட்டுவரி, சொத்துவரி ஆகியவை கடுமையாக உயர்த்தப்பட்டிருப்பதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திருவள்ளூர் உள்ளிட்ட 10 வட மாவட்டங்களை கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களாக அறிவித்து மாவட்ட ஒதுக்கீட்டு முறையில் ஆசிரியர் நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவதால், அவர்கள் வேறு மாவட்டங்களுக்கு பணியிட மாற்றம் கோரமாட்டார்கள் என்றும் கூறியுள்ளார்.

<<<<>>>>

சேலம், கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் கன முதல், மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை உள்ளிட்ட 17 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழகத்தின் 22 மாவட்டங்களுக்கு தனது ஒலிபரப்பு சேவையை வழங்கி வரும் ஆகாஷ்வானி கொடைக்கானல் பண்பலை வானொலியின் 25ஆம் ஆண்டு தொடக்க விழா இன்று நாமக்கல் மாவட்டம் மல்லசமுத்திரத்தில் நேயர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

-------------

நெல்லை சரக புதிய டிஐஜி-யாக திரு. மூர்த்தியும், நெல்லை மாநகர புதிய காவல் ஆணையராக திரு. ரூபேஷ்குமார் மீனாவும் இன்று பொறுப்பேற்றுக்கொண்டானர்.

-------------

சிவகங்கை மாவட்டம் கீழடி அருங்காட்சியகத்தை அமெரிக்கா, ஜப்பான், ஃபிலிப்பைன்ஸ், கொரியா, தாய்லாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள் குழு இன்று பார்வையிட்டது.

-------------

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்தில் இருந்து மகளிருக்கான இலவசப் பேருந்து உள்ளிட்ட 3 புதிய கூடுதல் பேருந்துகளின் சேவை இன்று தொடங்கப்பட்டது.

-------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் ஆரணி பகுதியில் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நெற்பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளது. நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

-------------

நாட்டின் 78வது சுதந்திர தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து அஞ்சல் அலுவலகங்களிலும் தேசியக்கொடி விற்பனை செய்யப்படுவதாக அஞ்சல்கோட்ட கண்காணிப்பாளர் திரு. முருகேசன் தெரிவித்துள்ளார்.

-------------

திண்டுக்கல் மாவட்டம் அணைப்பட்டியில் நடைபெற்ற மீன்பிடி திருவிழாவில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை 500க்கும் மேற்பட்டோர் குளத்தில் இறங்கி மீன்களைப் பிடித்துச் சென்றனர்.

-------------

பெரம்பலூர் மாவட்டத்தில் இயற்கை உழவர்கள் குழு சார்பில் 8ஆம் ஆண்டு பாரம்பரிய விதைத் திருவிழா இன்று நடைபெற்றது.

-------------

_விளையாட்டுச் செய்திகள்_

பாரிஸ் ஒலிம்பிக் போட்டி வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று நிறைவடைகிறது.

இந்திய நேரப்படி நள்ளிரவு 12.30 மணியளவில் நடைபெறவுள்ள இந்த நிறைவு நிகழ்ச்சியின் போது நடைபெறும் வீரர்கள் அணிவகுப்பில், இந்தியாவின் தேசியக்கொடியை மனுபாக்கரும், **Sreejesh-**ம் ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆடல் – பாடல் என பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் இந்த நிறைவு நிகழ்ச்சி 2 முதல் 3 மணி நேரம் வரை நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<The End>>>>**